செய்தி வெளியீடு எண்: 779 நாள்: 27.10.2018

# செய்தி வெளியீடு

## வருவாய்த்துறைக்கு இணையவழி பட்டா மாறுதல் படிவம் அனுப்பப்பட்டமைக்கான ஒப்புகை சீட்டு வழங்கும் புதிய வசதி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 12.2.2018 அன்று பதிவுத்துறைக்கான ஒருங்கிணைந்த வலை அடிப்படையிலான ஸ்டார் 2.0 திட்டம் துவக்கிவைக்கப்பட்டது.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக பட்டா மாறுதல் படிவம் (படிவம் 6) அனுப்பும் வசதி கணினி மயமாக்கப்பட்டு, ஆவணப்பதிவுக்குப்பின் பட்டாமாறுதல் படிவத்தினை இணையவழி வருவாய்த்துறைக்கு உடனுக்குடன் அனுப்பி அதன் ஒப்புகைச்சீட்டு எண்ணுடன் ஆவணதாரருக்கு குறுஞ்செய்தி அனுப்பும் வசதி ஏற்படுத்தப்பட்டது.

ஆவணப்பதிவு முடிந்தவுடன் பட்டா மாறுதல் படிவங்கள் பதிவுத்துறையால் இணையவழி வருவாய்த்துறைக்கு அனுப்பப்பட்டு அவ்விவரம் குறுஞ்செய்தி வழி ஆவணதாரருக்கு தெரிவிக்கப்பட்டபோதும் மீண்டும் இதே சொத்திற்கு பொது சேவை மையத்தில் பட்டா மாறுதல் கோரி விண்ணப்பங்கள் ஆவணதாரர்களால் மீண்டும் அனுப்பப்படுகின்றன. இதனால் ஒரே சொத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனுக்கள் பெறும் நிலை உருவாகிறது.

இதனைத் தவிர்க்கும் விதமாக சார்பதிவாளர் அலுவலகத்தில் இணையவழி பட்டா மாறுதல் படிவம் அனுப்பப்பட்டதற்கான ஒப்புகைச்சீட்டு வழங்கும் புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த ஒப்புகைச் சீட்டு அசல் ஆவணம் திரும்பப் பெறும்போது சார்பதிவாளரால் கையொப்பமிட்டு வழங்கப்படும். ஒப்புகைச் சீட்டில் வருவாய்த்துறையால் அளிக்கப்பட்ட

விண்ணப்ப எண் அச்சிடப்பட்டிருக்கும். http://www.eservices .tn.gov.in என்ற இணையதளத்திற்கு சென்று Know your application status என்பதில் இந்த விண்ணப்ப எண்ணை உள்ளீடு செய்து மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையினை தெரிந்துகொள்ளலாம்.

மேலும், Android கைபேசியில் AMMA eservice of land records என்ற செயலியை பதிவிறக்கம் செய்து இதில் மேற்கண்ட விண்ணப்ப எண்ணை உள்ளீடு செய்து மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையினை தெரிந்துகொள்ளலாம்.

பதிவுப்பணிகள் முடிவடைந்து அசல் ஆவணம் திரும்ப வழங்கப்படும் தேதி பத்திரப்பதிவின் போது வழங்கப்படும் இரசீதில் குறிப்பிடப்பட்டிருக்கும். அன்றைய தேதியில் ஆவணங்களை திரும்ப பெற்றுக்கொள்ளும் போது பட்டா மாறுதல் படிவம் வருவாய்த்துறைக்கு அனுப்பப்பட்டதற்கான ஒப்புகைச்சீட்டை தவறாது கேட்டுபெற்றுக்கொள்ள பொதுமக்கள் கோரப்படுகிறார்கள்.

இவ்வசதி தற்போது கிராம புல எண்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இச்சேவை விரைவில் நத்தம் மற்றும் நகர புல எண்களுக்கு விரிவுபடுத்தப்படும். தற்போது நத்தம் மற்றும் நகர புல எண்களுக்கு ஆவணப்பதிவின்போது ஆவணதார்ர்களிடமிருந்து பெறப்பட்ட பட்டா மாறுதல் படிவங்கள் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து வாரந்தோறும் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நேரிடையாக வழங்கப்பட்டுவரும் நடைமுறை தொடர்ந்து அமலில் இருக்கும்.

ஆவணப்பதிவின் போது உட்பிரிவு தேவைப்படும் இனங்களுக்கு உட்பிரிவுக் கட்டணம் பதிவுத்துறையால் வசூலிக்கப்படுகிறது. இவ்வாறு வசூலிக்கப்பட்ட கட்டண விவரங்கள் இணையவழி பட்டா மாறுதல் படிவத்துடன் வருவாய்த்துறைக்கு அனுப்பப்படுகிறது. ஆகவே, தனியாக உட்பிரிவுக் கட்டணம் வருவாய்த்துறையில் செலுத்த

தேவையில்லை எனவும், பொதுமக்கள் யாரும் ஆவணப்பதிவு முடிந்தவுடன் தனியாக பட்டா மாறுதல் படிவங்களை அரசு இ-சேவை மையங்கள் மூலமாக வருவாய்த்துறைக்கு அனுப்ப தேவையில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. பட்டா மாறுதல் தொடர்பாக புகார் ஏதும் இருப்பின் 1800 425 1333 என்னும் கட்டணமில்லா தொலைபேசி எண்ணைத் தொடர்புகொண்டு தெரிவிக்கலாம். இப்புதிய நடைமுறை 29.10.2018 முதல் பதிவு செய்யப்படும் ஆவணங்களுக்கு பொருந்தும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**